இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 02-12-2024

# மக்களால் நிராகரிக்கப்பட்டது யார்?

ஊடகங்களைச் சந்திக்காத பிரதமர் மோடி, திடீரென்று ஊடகங்கள் முன்னால் தோன்றி தனது திருவாயைத் திறந்திருக்கிறார். அவர் யதார்த்த உலகத்தில் இருக்கிறாரா, அல்லது கற்பனாலோகத்தில் இருக்கிறாரா எனத் தெரியவில்லை.

“அதிகாரப் பசி கொண்ட கட்சிகளை வாக்காளர்கள் பலமுறை நிராகரித்துள்ளனர். மக்கள், எதிர்க்கட்சிகளை மீண்டும் மீண்டும் நிராகரிக்க வேண்டும். மக்களால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டவர்களும், சக ஊழியர்களின் வார்த்தைகளை அலட்சியப்படுத்தியவர்களும், அவர்களின் உணர்வுகளை மதிக்காதவர்களும் நாடாளுமன்றத்தை ஆக்கிரமிக்க நினைக்கிறார்கள். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்தான் நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபடுகின்றனர். நாடாளுமன்ற நடவடிக்கைகளை சீர்குலைக்க சில கட்சிகள் முயற்சிக்கின்றன. நாடாளுமன்றத்தில் மக்களுக்காக காங்கிரஸ் என்றுமே பேசியதில்லை” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி.

இவர் நாடாளுமன்றத்துக்கு எத்தனை முறை வந்துள்ளார்? நாடாளுமன்றத்தில் எத்தனை விவாதங்களில் கலந்து கொண்டிருக்கிறார்? எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு பதில் அளித்திருக்கிறாரா? தான் பதில் சொல்ல வேண்டிய நாளில் மட்டும் வருகை தந்து, தனது உரையை ஆற்றிவிட்டுச் செல்வதை மட்டுமே வழக்கமாகக் கொண்டவர் மோடி. இவர் நாடாளுமன்ற விவாதங்கள் பற்றி பேசலாமா?

தன்மீதான குற்றச்சாட்டுகளுக்கு நாடாளுமன்றத்தில் திறந்த விவாதத்தை நடத்துவதற்கு எப்போதாவது அனுமதித்திருக்கிறாரா பிரதமர் மோடி? அப்படி ஒரு விவாதம் நடந்த போது உட்கார்ந்து எதிர்க்கட்சிகளின் உரைகளைக் கேட்டுள்ளாரா? அதற்கு பதில் அளித்துள்ளாரா? இல்லை!

**கேள்வி நேரத்தின் போது ஒரு நாள் கூட பிரதமர் மோடி நாடாளுமன்றத்துக்கு வந்ததில்லை. பொதுவாக நாடாளுமன்றங்கள் நடக்கும் போது பிரதமரோ, அமைச்சர்களோ வெளிநாடு செல்ல மாட்டார்கள். அப்போதும் வெளிநாடு சென்றவர் தான் பிரதமர் மோடி.**

**2014 ஆம் ஆண்டு பிரதமர் ஆனார் மோடி. 2018 ஆகிய நான்கு ஆண்டுகளில் 19 நாட்கள் மட்டுமே நாடாளுமன்றத்துக்கு மோடி வந்ததாக டெல்லி உயர்நீதிமன்றத்தில் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் சஞ்சய் சிங் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார். அவரை முறையாக நாடாளுமன்றத்துக்கு வரச் சொல்லி உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இது, இதுவரை இருந்த எந்தப் பிரதமரும் எதிர்கொள்ளாத கேள்வி ஆகும்.**

மணிப்பூர் விவகாரத்தில் இவரை பேச வைக்க வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கட்சிகள் இணைந்து நம்பிக்கையில்லா தீர்மானத்தை சபையில் கொண்டு வந்தன. அதற்கு அவர் பேசித்தான் ஆக வேண்டும். அதனால் வேறு வழியின்றி பேசினார். இது தான் நாடாளுமன்ற ஜனநாயகத்தை மோடி காப்பாற்றும் லட்சணம் ஆகும்.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர் அவர் தானே தவிர, ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் அல்ல. ‘400 இடங்களைக் கைப்பற்றுவோம்’ என்று நாடாளுமன்றத்தில் கடந்த பிப்ரவரி மாதம் சொன்னார் பிரதமர் மோடி. ‘370 இடங்களை பா.ஜ.க. மட்டும் தனித்து கைப்பற்றும்’ என்றும் சொன்னார் பிரதமர் மோடி. அப்படி வென்று காட்டி இருக்கிறாரா? பா.ஜ.க. 370 இடங்களைப் பெறவில்லை. 240 இடங்களைத் தான் பெற்றுள்ளது. பெரும்பான்மையை நிரூபிக்க 272 இடங்கள் இருக்க வேண்டும். அதற்கே 32 இடங்கள் தேவை. பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான 272 ஐ விட 100 இடங்கள் அதிகமாகப் பெறுவோம் என்று சொல்லிக் கொண்டார். அது நடக்கவில்லை. மக்கள் அவரை நிராகரித்துவிட்டதாகத் தானே பொருள்?

**‘பா.ஜ.க. கூட்டணியானது 400 இடங்களைப் பிடிக்கும்’ என்று சொன்னார்மோடி. இன்று பா.ஜ.க. கூட்டணியானது 292 இடங்களைத்தான் பிடிக்க முடிந்துள்ளது. 300 ஐ கூடத் தொட முடியவில்லை. மக்கள் அவரை நிராகரித்துவிட்டார்கள் என்று தானே பொருள்?**

ஒரிசா ஆந்திரா ஆகிய இரண்டு சட்டமன்றத் தேர்தலோடு சேர்த்து நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாமல் இருந்திருந்தால் அங்கும் நிலைமைகள் மாறி இருக்கும். மாநில ஆட்சியை மாற்ற நினைத்தவர் கோபம், நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலித்து விட்டது. பீகார் கர்நாடகாவில் பத்து இடங்கள் குறைந்திருந்தால் நிலைமை மாறி இருக்கும். 210 க்கு பா.ஜ.க. இறங்கி இருக்கும்.

370 இடங்களைக் கைப்பற்றி இந்திய ஜனநாயகக் கட்டமைப்பை நாசப்படுத்த நினைத்திருந்தார் மோடி. ‘400 கிடைத்தால் தான் நாம் நினைத்ததைச் செய்ய முடியும்’ என்று முழங்கினார் மோடி. ஒரே நாடு ஒரே தேர்தல் என்று சொல்லி சர்வாதிகாரத் தன்மை கொண்ட அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க நினைத்தார்.

**‘பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்று வோம்’ என்று பா.ஜ.க. எம்.பி. இந்த தேர்தலில் பரப்புரை செய்தார். “400 இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்று பிரதமர் மோடி ஏன் சொல்கிறார் என்றால், அரசியலமைப்பு சட்டத்தை நாம் மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான்” என்று பா.ஜ.க. எம்.பி.யும் முன்னாள் அமைச்சருமான அனந்த குமார் சொன்னார். அது எதையும் செய்ய முடியாத வகையில் மோடியை நிராகரித்துள்ளார்களே மக்கள்!**

தேர்தலுக்கு முன்னதாக கடவுளின் அவதாரமாக தன்னைக் காட்டிக் கொண்டவர், தேர்தல் முடிந்ததும் ‘கூட்டணிக் குழந்தையாக’ மாறினாரே ஏன்?

“மக்களவைத் தேர்தலில் அடைந்த வெற்றிக்காக தேசிய ஜனநாயக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றாரே ஏன்? மக்கள் நிராகரித்தது தானே?!

**மோடி சொந்த பலத்தால் பிரதமராக இருக்கவில்லை. நிதிஷ்குமார், சந்திரபாபு ஆகிய இருவரது தயவால்தான் பிரதமராக இருக்கிறார். அதனை உணர்ந்து சவால் விட வேண்டும்.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2024) “ஃபெஞ்சல் புயலால், தொடர்ந்து மழை பெய்து வருவதையொட்டி, கொளத்தூர், செல்வி நகர் பகுதியில் உள்ள மழை நீர் வெளியேற்று நிலையத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, வழக்கறிஞர் இரா.கிரிராஜன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நீரேற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி. வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி. கணேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஃபெஞ்சல் புயல்: – போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும்

# தமிழ்நாடு அரசின் நிவாரண நடவடிக்கைகள்!

## மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

**சென்னை, டிச.02**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் காரணமாக தொடர்ந்து மழை பெய்து வருவதையொட்டி, நேற்று (1.12.2024) வட சென்னை கொளத்தூர் பகுதிகளில் மழைநீர் வடியும் பணிகளை பார்வையிட்ட பின்னர், தமிழ்நாடு அரசின் சார்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். குறிப்பாக, மழையால் மிகவும் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் நில வரங்கள் குறித்து கேட்டறிந்தார்.**

வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த ஃபெஞ்சல் புயல் நேற்று முந்தினம் (30.11.2024) மாலை 5.30 முதல் இரவு 11.30 வரை காரைக்கால் மற்றும் மகாபலிபுரத்திற்கு இடையே மணிக்கு 70 முதல் 90 கிலோ மீட்டர் காற்றின் வேகத்துடன் கரையைக் கடந்தது.

இதன் காரணமாக, நேற்று (1.12.2024) காலை 8.30 மணி வரை சராசரியாக விழுப்புரம் மாவட்டத்தில் 22.8 செ.மீ., திரு வண்ணாமலை மாவட்டத்தில் 12.00 செ.மீ., கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 11.3 செ.மீ., காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 செ.மீ., மழையும் பெய்துள்ளது.

குறிப்பாக, விழுப்புரம் மாவட்டம் மயிலத்தில் 47.7 செ.மீ., நெமிலியில் 45.7 செ.மீ. ஆத்தூரில் 29 செ.மீ., திருவண்ணாமலை மாவட்டம், ஊசூரில் 25 செ.மீ., கடலூர் மாவட்டம், காளையூரில் 21 செ.மீ. மழையும் பெய்துள்ளது.

முதலமைச்சர் அவர்களது உத்தரவின்படி, விழுப்புரம் மாவட்டத்திற்கு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்திட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடியுடன் இணைந்து செயல்பட போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று கடலூர் மாவட்டத்திற்கு வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கிடவும், பணிகளை துரிதப்படுத்தவும் நீர் வள ஆதாரத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.மணிவாசன், தலைமையில், பெருநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் ஆல்பி ஜான், பேரூராட்சிகள் துறை இயக்குநர் கிரன் குராலா, ஊரக வளர்ச்சி துறை இயக்குநர் பொன்னையா, நகராட்சி நிர்வாக ஆணையர் சிவராசு ஆகியோரை அனுப்பி வைக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், போக்குவரத்து துறை ஆணையருமான எஸ்.ஜெ. சுன் சோங்கம் ஜடக் சிரு மூன்று நாட்களாக விழுப்புரத்தில் முகாமிட்டு நிவாரணப் பணிகளை கண்காணித்து வருகிறார்.

கடலூர் மாவட்டத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி தலைமையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்ட இயக்குநர், எஸ்.எ. ராமன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மேற்கண்ட பணிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களிடம் நேற்று (1.12.2024) மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காணொலி காட்சி வாயிலாக தொடர்புகொண்டு, மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

### நிவாரண முகாம்கள்

167 நிவாரண முகாம்களில் மொத்தம் 6022 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் இதர அத்தியாவசிய வசதிகள் செய்துதர முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

### மீட்புப் படை

முதலமைச்சர் அவர்களது உத்தரவின்படி விழுப்புரம் மாவட்டத்திற்கு தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 14 குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடலூருக்கு 3 குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் அனைத்தும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், மின் துறையினரால் அமைக்கப்பட்டுள்ள, 70 குழுக்களும் மின்சாரம் தடையின்றி வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், மின் தடை ஏற்பட்டுள்ள இடங்களில் மீண்டும் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், பழுதடைந்த மின்கம்பங்களை உடனடியாக மாற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் மழைநீர் சென்றிருந்தால், அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், அதற்குத் தேவையான மோட்டார் பம்பு செட்டுகளை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்றும், முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு முறையான உணவு, அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திருமதி பெ.அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சைதை 169 -வது வட்டத்தில் உதயநிதி ‘உதயநாள் கூட்டம்’! அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

## இரா.துரைராஜ் முன்னிலை! தமிழச்சி தங்கபாண்டியன் – மு.மகேஷ்குமார் – எஸ்.குணசேகரன் பங்கேற்பு! இரா.தமிழ்வாணன் தலைமை! எல்.ஆரோக்கியராஜ் வேண்டுகோள்!

*சென்னை, டிச. 2 -*

*சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 169 வது வட்டத்தில் துணை முதலமைச்சர் - இளைஞரணி செயலாளர் உதயநிதி அவர்களின் உதய நாள் முன்னிட்டு தெருமுனை கூட்டம் இன்று ( 2- 12- 2024 திங்கட்கிழமை) மாலை 6:00 மணிக்கு எல்டிஜி சாலை சின்ன மலையில் இரா தமிழ்வாணன் (வட்ட துணை செயலாளர்) தலைமையில் நடைபெறுகிறது. இதில் சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13 வது மண்டல குழு தலைவர் இராதுரைராஜ், சைதை மேற்கு பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் மு.கிருஷ்ணமூர்த்தி , மாவட்ட அவை தலைவர்*

*மு.கிருஷ்ணமூர்த்தி, மு. ஆரோக்கியம் (பகுதி துணை செயலாளர்) ஆகியோர் முன்னிலை வகித்து பேசுகின்றனர். மாவட்ட பிரதிநிதி இரா.சுதாபிரியன், வட்டக் கழக நிர்வாகிகள் அ.ஆரி., துரை சரவணன், சைதை. ஆ.விக்டர், மு சந்திரா, பகுதி பிரதிநிதிகள் மை.அருள்ராஜ், .சூரியன் கே பிரபு, அ. ஆனந்.ராஜ், ஆ. பரணி ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சேர்க்காடு கென்னடி, மு. செந்தூரபாண்டி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு மகேஷ்குமார், சைதை சம்பத் மா அன்பரசன், மின்னல் கந்தப்பன். சைதை மா.அன்பரசன். வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், தா. மோகன்குமார், இ முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.பாக்கியலட்சுமி, களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி. ஜானகிராமன், கவிதா கௌதமன், க.மணி, கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர். செந்தில், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, அட்கோகமலநாதன், மூர்த்தி, சைதை சாதிக், ஜெ. அகஸ்டின், நா.மணிகண்டன், அஞ்சம் ராமன், கோ.பாஸ்கர், க.ஒப்பில்லாமணி, நரசிம்மன், என்.நந்தகோபால், ஏ.மஜீத், எஸ்.ஜெ.சலாம், எஸ்.ராதாகிருஷ்ணன், வே.முருகன், க.உமாபதி, ஜி.செல்வராஜ், வே .ரமேஷ் குமார், ஜி.யோவான், கோட்டூர் ந.பாபு, எஸ்.ரவி, எஸ்.சேகர், மு.மகேஷ்லாரன்ஸ், கே.எம். எஸ்.கணேசன்,*

*எ.கௌதம், சே.அருண், ஈ. மதனசேகரன், க.வேல்முருகன், பி.செல்வம், ஆர்.ஜி.ஸ்டாலின், ஆர்.செல்வம் கே.எஸ்.பாபு, இரா.சுதாகர் ,எஸ்.எம்.மோகன் தாஸ், ஜெ.வி.பிரதாப், மோ. எழில் ,எஸ்.பிரகாஷ், பார்வதி புவனேஸ்வரி, ஆர்.சேதுராமன், பு.ஜவஹர்தீன், மு.முருகன், மு.செல்வகுமார், எஸ்.மணிகண்டன், அன்புரோஸ், மு.ஜெயவேல், ச.ஜெயராம், சி.தேவேந்திரன், எஸ்.கரிமுல்லா, பி.திவாகர், ஏ.சுப்பிரமணி, எஸ்.ஏ. மோகன் குமார், ஏ.துரைராஜ், பென்னிகிளமெண்ட், மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.*

*இதில் அணிகளின் உறுப்பினர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எல்.ஆரோக்கியராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.*



முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விழுப்புரம் பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறையில் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை தொலைப்பேசி மூலம் கேட்டறிந்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செபுஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை , நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக்அலி மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது), கோட்டாட்சியர் முருகேசன், நகராட்சி ஆணையர் வீரமுத்து குமரன், வட்டாட்சியர் கனிமொழி, மின்துறை அதிகாரிகள், அரசு அதிகாரிகள், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு மாணவர் அணி விக்ரமன், தென்னமாதேவி சூர்யா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.